# அரசியல் கட்சிகளில் மதக்காரணிகளின் செல்வாக்கு: இலங்கையை மையப்படுத்திய ஆய்வு (1978-2014)

**சி.பிரசாத்[1]ரூகே.ரீ.கணேசலிங்கம்[2]**
[1]யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[2]அரசறிவியற் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*sripirasath_87@yahoo.com, saarusharon@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றம் 1930களின் பிற்பகுதியிலேயே ஆரம்பமாகின்றது. டொனமூர் அரசியற் திட்டத்தின் சர்வஜன வாக்குரிமையின் விளைவு காரணமாக அரசியற் கட்சிகள் உருவாவதற்கான அடித்தளத்தினை இட்டன. முதலில் இடதுசாரிக் கட்சிகளே தோற்றம் பெற்றன. பின்னர் காலனித்துவ அரசிடம் இருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு ஐக்கிய தேசியக் கட்சி என்ற வலதுசாரிக் கட்சி உருவாக்கப்பட்டது. இக்கட்சியில் ஏற்பட்ட தலைமைத்துவ முரண்பாடு காரணமாக S.W.R.D.பண்டாரநாயக்கா இக்கட்சியில் இருந்து விலகி சிங்கள மகாசபை மூலமும், பௌத்த மத தேசியவாதிகளின் ஆதரவோடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோற்றம் பெற்றது. 1956ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் காரணமாகவும் மற்றும் பௌத்த மதத்தின் ஆதரவின் மூலம் இனவாத அரசியல் எழுச்சியுற்றும் மொழி, மதம் என்பன அரசியல் மயமாக்கப்பட்டதோடு பிற்பட்ட காலத்தில் பௌத்த மதத்தின் செல்வாக்கு அரசாங்க நிறுவனங்களில் தாக்கம் செலுத்தத் தொடங்கியது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சி அதிகாரத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இனவாத அரசியலுக்கு ஆதரவு வழங்கியிருந்ததோடு இவ்விரு கட்சிகளினால் உருவாக்கப்பட்ட யாப்புக்களில் பௌத்த மதம் அரச மதமாக அங்கீகரிப்பட்டிருந்தது. மேலும் பௌத்த பீடங்களின் செல்வாக்கு கட்சியின் அரசியலினை தீர்மானிப்பதாக அமைந்ததோடு இலங்கையின் அரசியல் கட்சிகளில் மதம் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக விளங்கியது எனலாம். இலங்கையானது பல்லின கலாசாரத்தைக் கொண்ட நாடு ஆகும். இங்கு பல இனத்தவர்கள் வாழ்வதோடு அவர்கள் பல மொழி பேசுபவர்களாகவும், பலவகையான சமய நம்பிக்கை மற்றும் பாரம்பரிய கலாசார மரபுகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்த போதிலும் இலங்கை அரசியலில் மதவாதம் தலைதூக்கும் தன்மையானது இனங்களுக்கிடையான ஒற்றுமையினை சீர்குலைப்பதாக அமைவதோடு மட்டுமன்றி பெரும்பான்மை மதமாக பௌத்தம் இருந்த போதிலும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் சுதந்திரத்தில் பௌத்த தேசியவாதக் குழுக்களும் மற்றும் அவை சார்ந்த கட்சிகளும் தலையிடுகின்ற தன்மையானது சமாதான செயன்முறைகளுக்கும், மத சுதந்திரத்திற்கும் தடையாக அமைவதோடு மட்டுமன்றி மத வன்முறைகளுக்கான காரணியாகவும் விளங்குகின்றது. இந்த பின்னணியில் இவ் ஆய்வானது அரசியல் கட்சிகளில் மதக் காரணிகளின் செல்வாக்கினை இலங்கையை மையமாகக் கொண்ட ஆய்வு செய்வதாக அமைகின்றது. இவ் ஆய்வானது முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்டும், கட்சிக் கோட்பாடு மதச்சார்பின்மை கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டும் வரலாற்று அணுகுமுறை ஒப்பீட்டு அணுகுமுறையின் மூலம் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** மதம், கட்சி, மதச்சார்பின்மை, பௌத்தம், இனவாத அரசியல்

## அறிமுகம்

இலங்கையின் கட்சிமுறை வரலாறு ஒப்பீட்டளவில் குறுகியதாகும். டொனமூர் அரசியல் அமைப்புக் காலப்பகுதியிலேயே இலங்கையில் கட்சிகளின் செயற்பாட்டினை அவதானிக்க முடியும். ஆனால் 1920ம் ஆண்டு ஏ.ஈ.குணசிங்கவின் தலைமையிலான தொழிற்கட்சி முதல் அனுபவமாக உள்ளது. ஆனால் அது கொழும்பு நகர தொழிலாளர்களை இணைத்துக் கொண்டது மட்டுமல்லாது தனியொரு மனிதனை மையமாகக் கொண்டிருந்த காரணத்தால் கட்சிமுறையிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது. 1935ம் ஆண்டு முதன்முதல் சோஸலிஸ சிந்தனைக்குள் கவரப்பட்ட இளைஞர்களால் இலங்கை சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டிருந்தது. அதே போன்று இலங்கை ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதனையும், இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதனையும் நோக்கமாகக் கொண்டு 1946ம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்காவின் தலைமையின் கீழ் ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி (UNP) உருவாக்கப்பட்டது. இக்கட்சியில் முஸ்லீம்லீக், சிங்கள மகாசபை என்பனவும் இணைந்து கொண்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்த பண்டாரநாயக்காவுக்கும், கட்சித் தலைமைப் பீடத்துக்குமிடையே அரசாங்கக் கொள்கைகள் சம்மந்தமாக சில கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதன் காரணமாக 1951ல் சிங்கள மகாசபையின் இடத்தில் ஒரு நடுவழிப் போக்குள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அவர் தோற்றுவித்தார். இக்கட்சியின் தோற்றத்தோடு வலதுசாரி இடதுசாரி என பிரிந்து

காணப்பட்ட இலங்கையின் கட்சிமுறையில் ஒரு புதிய போக்கு தென்படலாயிற்று. இரு பிரதான கட்சிகளுடன் ஏனைய சிறிய கட்சிகள் அல்லது பல கட்சிகள் உருவாகியது எனலாம்.

இரு கட்சிகளும் உருவாவதற்கு தனித்துவமான காரணங்கள் அமைந்தாலும் அவை வளர்ச்சியடைய மதம் பிரதான உந்துசக்தியாக அமைந்தது. அதில் பண்டாரநாயக்காவின் பங்கு தனித்துவமானது. அவர் சிங்கள மகாசபையைப் புணரமைத்ததுடன், அவர் சிங்கள, பௌத்த மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கவும் முற்பட்டார். இவ்வகையில் 1950களில் இருந்து பௌத்த மதத்திற்கு விசேட அரசியல் அமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதனை வற்புறுத்தி வருவதனைக் காணலாம். அவ்வகையில் நாடு முழுவதும் பௌத்த மதமே அரசாங்க மதமாக்கப்பட என்ற கருத்து மேலோங்கியது. இவ்வகையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்கள மொழியைப் போலவே பௌத்த மதத்தையும் கருவியாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். இக்காலகட்டத்திலே பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்குவதில் கொண்டிருந்த அதேயளவு ஆர்வத்தைப் பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதிலும் கொண்டிருந்தது. சிங்கள, பௌத்த மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் தனிக்கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தன்னை இனங்காட்டிக் கொண்டது. இப் பின்னணியிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு சிங்கள பௌத்தர்களின் ஆதரவு அதிகரிக்கத் தொடங்கியது. பௌத்த சங்கமும் அதன் பிக்குகளும் பண்டாரநாயக்காவின் பின்னால் அணிதிரண்டனர்.

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் இலங்கையின் கட்சிமுறை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் அரசியலில் ஒரு திருப்புமுனையையும் ஏற்படுத்தியது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவ்வகையில் முதலாவதாக கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற புதிய அமைச்சை ஏற்படுத்தினார். கலாசார அலுவல்கள் அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பௌத்தமத விவகாரங்களில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டதாக இயங்கத் தொடங்கியது. இதனால் இலங்கையில் வாழ்ந்த ஏனைய மதப் பிரிவினர் பாதிக்கப்பட்டனர். 1954ல் UNP அரசாங்கம் புத்த ஜயந்தி தின நிகழ்வுகளை ஒழுங்கமைக்கவும், வழிபடுவதற்குமென நியமிக்கப்பட்ட லங்கா பௌத்த மடாலயத்தின் நீண்டகாலத் திட்டங்கள் பல இப்புதிய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் முக்கியமானவையாக புத்த ஜயந்தி ஞாபகார்த்த கட்டிடங்கள் அமைத்தல், தலதா மாளிகையின் புணரமைப்பு, பௌத்த கலைக்களஞ்சியம், சிங்கள, பாளி திரிபீடகங்கள் என்பவற்றின் தொகுப்பும் பதிப்பும் காணப்பட்டன. கலாசார அமைச்சின் கீழே இந்து, முஸ்லீம் மத விவகாரங்களுக்கான ஆலோசனை சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன. பௌத்த நிகழ்ச்சித் திட்டங்கள் நேரடியாகவும் ஒழுங்காகவும் இவ் அமைச்சினால் நிர்வகிக்கப்பட்டன.

தொடர்ந்து 1970ம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலே மூன்றில் இரண்டு ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் என்பவற்றின் கூட்டரசாங்கம் முதலாவது சுதேசிய யாப்பொன்றை வரைந்து கொண்ட போது அதன் இரண்டாவது அத்தியாயம் இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு பிரதான இடம் வழங்குமெனப் பிரகடனப்படுத்தியது மாத்திரமன்றி, பௌத்த மதத்தைப் பாதுகாத்துப் பேணுவது அரசின் கடமையென்றும் எடுத்துக் கூறியது. ஏனைய எல்லா மதங்களும் யாப்பின் பகுதி 18(1) வழங்கும் உரிமைகளைப் பெறும் என உறுதிகூறப்பட்டது.

அடுத்து வந்த அரசாங்கமாகிய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 1978ல் ஜனாதிபதி ஆட்சி யாப்பொன்றை ஏற்றுக்கொண்ட போது அந்த யாப்பின் ஒன்பதாவது பகுதி முன்போன்றே பௌத்தத்திற்கு முதன்மை அந்தஸ்து வழங்கி, அதனைப் பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் கூறிய போது அது எவ்வகையிலும் ஆச்சரியம் தருவதாயிருக்கவில்லை. ஏனைய மதங்களின் உரிமைகள் 10, 14(1) என்பவற்றின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு ஆட்சிக்கு வருகின்ற அரசியற் கட்சித் தலைவர்கள் அஸ்கிரிய, மல்வத்தை, அமபுர, ராவண்ண ஆகிய பௌத்த பீடங்களுடன் நல்லுறவினை வளர்க்க முற்படுகின்றன. அது மட்டுமன்றி நாட்டின் தலைவராக வருகின்ற ஒருவர் பௌத்தத்தை பின்பற்றுபவராக இருப்பதோடு அவர்களின் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் பௌத்த துறவிகளும் அரசியற் கட்சிகள் மூலம் அரசியலில் ஈடுபடுவதிலிருந்து அரசியல் கட்சியில் மதத்தின் செல்வாக்கினை புரிந்துகொள்ள முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

Religion in Context என்ற கட்டுரைத் தொகுப்பில் வெளியான ஜயதேவ உயன்கொட என்பவரது "இலங்கையின் சமூக அரசியல் மாற்றங்களும் பௌத்தமதமும்" (1960) என்ற தலைப்பிலான கட்டுரையில் காலணித்துவத்திற்குப் பின்னரான இலங்கை வரலாற்றில் பௌத்த மதம் செல்வாக்குப் பெறுதல், அது அரசியல் மயப்படுத்தப்படுதல் எனும் இரண்டு பிரதான விடயங்களை அணுகியுள்ளார்.

Urmila Phadnis என்பவரின் Religion and Politics in Srilanka (1976) எனும் நூல் புத்திஜீவி வர்க்கத்தின் ஒரு அங்கமான பௌத்த மதகுருமார் இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1950களின் முற்பகுதியிலும் நடுப்பகுதியிலும் சுயமான இயக்கமாக அரசியல் அரங்கில் செயற்பட்டதோடு, அரசியல் மாற்றத்துக்கான கருவியாகவும் விளங்கியிருந்த தன்மையினையும், சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் சிங்கள பௌத்தம் என்ற கருத்தியலின் மூலம் தேசியவாதத்தினை ஊக்குவித்திருந்த தன்மையினையும் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

ஸ்டான்லி தம்பையா "பௌத்தத்திற்கு துரோகம்" (1992) எனும் நூலில் அன்பு, அஹிம்சை ஆகியவற்றைப் போதிக்கும் ஒரு சமயப் பாரம்பரியம் உள்ள நாட்டில் ஏன் இவ்வாறு வன்முறைகள் நிகழ்கின்றன என்பதனையும், பௌத்தம் போதிக்கும் அஹிம்சைக்கு முரணாக இலங்கையில் அரசியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதற்கான காரணங்களையும் அடையாளப்படுத்தியுள்ளார்.

செனிவிரத்தின என்பவர் "The Work of Kings; The New Buddhism in Srilanka" என்ற தனது நூலில் சமூகத்திற்கும் பௌத்தத் துறவிகளுக்குமான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதனையும், தேசத்தின் புணர் நிர்மாணம், ஆன்மீகப் புத்தெழுச்சி ஆகிய விடயங்களில் பௌத்த மடாலயங்களின் தொடர்புகளையும் புலப்படுத்தியுள்ளார்.

குமாரி ஜயவர்த்தன, 'இலங்கையின் இன வர்க்க முரண்பாடு' (1995) என்ற நூலில் இலங்கையின் இன வர்க்க முரண்பாட்டில் அரசியற் கட்சிகளின் மதம் சார்ந்த கொள்கைகள் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதனை இடதுசாரிப் பார்வையில் நோக்கியிருந்தமை இந்த ஆய்வுக்கு அதிகம் உதவக்கூடியதாகும்.

Desilva.C.R (1987) Political Party System in Sri Lanka என்ற ஆய்வுக் கட்டுரை இலங்கை அரசியல் கட்சிகளின் தோற்றம், கட்சிகளின் கொள்கைகள், கட்சிகளின் யாப்புக்கள் ஆகிய விடயங்களை விளக்குகின்றது. அது மட்டுமன்றி அரசியல் தலைவர்களது தலைமைத்துவம், கட்சிகளின் ஒழுங்கமைப்பு, கட்சிகளின் எதிர்காலம் என நான்கு தலைப்புக்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இது கட்சிகள் பற்றிய ஆய்வாக அமைந்துள்ளதோடு கட்சிமுறையினை 1980 வரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாக அமைந்துள்ளது.

W.A. Wiswawarnapa (2005) Sri Lanka Freedom Party என்ற நூலில் சிங்கள மகாசபையின் மூலம் பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரத்திக் கட்சியினை தோற்றுவித்ததற்கான காரணிகளைக் குறிப்பிட்டு 1956, 1960, 1970, 1994 ஆகிய காலப்பகுதிகளில் பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் கட்சியின் வாக்குவிகிதத்தினையும் மற்றும் கட்சியின் வளர்ச்சிப் போக்கினையும் கட்சிப் பிரதிநிதி என்ற வகையில் தனது ஆய்வினை முன்வைத்துள்ளார்.

ஜயதேவ உயான்கொட "நாடும் நமது போக்கும் - இலங்கை அரசியல் 2007 - 2008" என்ற நூலில் 2007, 2008 களில் சமாதானம், இணக்கப்பாடு என்பவற்றிற்கான பேச்சைவிட போர், பகைமை என்பவற்றின் பேச்சே இலங்கையின் பொதுவாதப் பிரதிவாதங்களையும் ஆக்கிரமித்திருந்தது. இந்நூலில் அவர் போர் மற்றும் சர்வதேச பரிமாணங்கள் தொடர்பான தன்னுடைய வாதத்தினை முன்வைத்துள்ளார். அத்தோடு கட்சிகளுக்கிடையிலான போட்டித் தன்மையினையும் மற்றும் உட்கட்சி அரசியலினையும் இந்த நூலின் ஒரு பகுதியாக ஆய்வு செய்துள்ளார். அத்தோடு ஜே.வி.பி சிங்கள தேசியவாதம், வர்க்க அரசியல் என்ற இரண்டு முகங்களைக் காட்டுவதனை அடையாளப்படுத்தியிருந்ததோடு, அக்கட்சியின் பிளவுபட்ட தன்மையினையும் எடுத்துக் காட்டுகின்றார். இருப்பினும் இவ் ஆய்வானது 2007, 2008 இலங்கை அரசியலை மையமாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது.

கே.என்.பணிக்கர் "வகுப்புவாத அச்சுறுத்தலும் மதச்சார்பின்மை சவால்களும்" என்ற நூலில் வகுப்புவாத எதிர்ப்பு என்ற அணுகுமுறை வகுப்புவாதத்தின் நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுப்பது என்பதோடு மதச்சார்பற்ற நடவடிக்கைகளைக் குறுக்கி விடுகின்றது. மாறாக, சமுதாயத்தில் மதச்சார்பற்ற கருத்தோட்டத்தை உருவாக்குவதற்கான தன்னிச்சையான திட்டத்தினை செயலாக்க வழிவகுப்பதோடு வகுப்புவாதத்தினை முறியடிக்கின்றது. இந்தியாவின் வகுப்புவாத போராட்டத்தின் விளைவுகளைப் பட்டியலிட்டும் அதன் படிப்பினைகளைப் புலப்படுத்துகின்றார்.

மஹிந்த தீகல்லே (2005), "இலங்கையின் இனமுரண்பாடும் பௌத்தமும் சமாதானமும்" என்ற நூலில் இலங்கையின் இன முரண்பாட்டின் மூலகங்கள், இலங்கை முரண்பாட்டில் பௌத்த சங்கத்தின் பங்கு, பௌத்த அடிப்படைவாதம், பௌத்த வன்முறையே இலங்கையின் யுத்தம், இன முரண்பாடு ஒரு பௌத்த ஆய்வு போன்ற தலைப்புக்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு பொதுவாக இலங்கையில் பௌத்த மதத்தின் தாக்கத்தினை மதம், அரசியல் என்ற இரு வெவ்வேறுபட்ட வகையில் விமர்சன ரீதியாகவும்

அதேநேரம் பௌத்த அரசு பாதுகாக்கப்பட வேண்டியது என்ற கோணத்திலும் இந்நூல் ஆய்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

**ஆய்வுப் பிரச்சினை**

இன்றைய ஜனநாயக அரசாங்க முறையில் அரசியற் கட்சிகளின் பங்கு இன்றியமையாதது. இதன் காரணமாகவே இன்றைய அரசாங்கம் கட்சி அரசாங்கம் என்று அழைக்கப்படுகின்றது. இலங்கையில் காணப்படுகின்ற இரு பிரதான அரசியற் கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்வதற்காக இனவாத, மதவாதக் கொள்கைகளை தத்தமது கொள்கைகளாக மாற்றியுள்ளதோடு அவற்றின் மூலம் அரசியற் தலைவர்கள் ஜனநாயகம் பேச முற்படுகின்றனர்.

**கருதுகோள்**

- அரசியற் கட்சிகள் தம் வளர்ச்சியில் மதத்துக்கு பிரதான இடத்தினை வழங்கியிருந்தன.

**ஆய்வின் நோக்கம் (Objectives of the research)**

இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மதம் பிரதான இடத்தினை வகிக்கின்றது. ஆட்சிக்கு வருகின்ற இரு பிரதான கட்சிகளும் மதத்தினை பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்ற முற்படுகின்றனர். இந்த வகையில் இலங்கையில் பௌத்த மதம் மேலோங்கி அரசியல் செல்வாக்குடையதாக காணப்பட ஏனைய மதங்கள் பின்தள்ளப்படுவதனைக் காணலாம். பௌத்த மதமானது அரசியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. பௌத்த மதத்தின் அடிப்படையிலேயே இன்றைய இலங்கை அரசியல் நியமம் பெறுகின்றது. பௌத்த மதத்தின் அரசியல் செல்வாக்கினால் பௌத்த மதவாதம் ஏற்பட்டு நாட்டில் ஜனநாயக மரபுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மதவாதம் அனேக வளர்முக நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாக அமைகின்றது.

இவ் ஆய்வானது இலங்கையில் அரசியல் கட்சிகளின் அபிவிருத்தியில் மதத்தின் தாக்கத்தினை அளவீடு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரித்தலும்.**

இவ் ஆய்வு ஓர் விபரண ஆய்வாகும். இவ் ஆய்வுக்கான தரவுகள் முதனிலைத் தரவு மூலங்களில் இருந்தும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. முதல்நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பேட்டிமுறை கையாளப்பட்டுள்ளது. குறிப்பாக அரசியற் கட்சிகளின் தலைவர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், கல்விச் சமூக பிரதிநிதிகள் போன்றோரிடம் இருந்து பேட்டிமுறையின் மூலமும் மற்றும் அரசியற் கட்சிகளின் கொள்கைப் பிரகடணங்கள், தேர்தல் விஞ்ஞாபனங்கள், மாநாட்டு அறிக்கைகள், ஹன்சாட் போன்றவற்றிலிருந்தும் முதன்நிலைத் தரவுகள் பெறப்பட்டதோடு, நூல்கள் பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து இரண்டாம் நிலைத் தரவுகளும் பெறப்பட்டன.

மேலும் இவ் ஆய்வானது கோட்பாட்டு ரீதியாக மதச்சார்பின்மை, அரசியல், மதம், கட்சி முறைமை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட கோட்பாட்டு அணுகுமுறையின் துணைகொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுரை**

நவீன அரசாங்கத்தின் உயிர்நாடியாக அரசியற் கட்சிகள் விளங்குகின்றன. அரசியற் கட்சிகள் என்பது அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக போராடுகின்ற குழுக்கள் எனலாம். அரசியற் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கான காரணிகளாக பிரதிநிதித்துவ முறையின் வளர்ச்சி, பொருளாதாரம், சமூகக்காரணி, மதம், மொழி, இனம், தேசிய உணர்வு போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கையில் அரசியல் கட்சிகளின் தோற்றமானது டொனமூர் அரசியற் திட்டத்தின் சர்வஜன வாக்குரிமையினைத் தொடர்ந்து தோற்றம் பெற்றன எனலாம். இலங்கையின் அரசியற் கட்சிகளை வலதுசாரிக் கட்சி, இடதுசாரிக் கட்சி என வகைப்படுத்த முடியும். மேலும் இரு பிரதான கட்சிகளுடன் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைப்பதால் இரு கட்சி முறையிலான பலகட்சிமுறை எனவும் குறிப்பிட முடியும். இருப்பினும் தற்போது கட்சிகளுடைய கொள்கைகள் தொடர்பில் பெரிய வேறுபாடு இல்லை எனலாம்.

மதம் என்பது மனிதனுக்கும் கடவுளுக்குமிடையே தொடர்புப் பாலமாகக் காணப்படுகின்றது. மலை உச்சியை இறைவன் எனக்கொண்டால் அதனை அடையும் பலவழிப் பாதைகளும் பல மதங்களைப்

பிரதிபலிக்கின்றன. இலங்கை பல்லின, பலமதங்களைக் கொண்ட ஒரு நாடு ஆகும். இங்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஏனைய இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்களில் பௌத்தம் 70%, இந்துக்கள் 12.7%, முஸ்லிம்கள் 7.9%, கிறிஸ்தவர்கள் 7.5%, போன்ற மதங்களைப் பின்பற்றுபவர்கள் காணப்படுகின்றனர். இலங்கையின் அரச மதமாக பௌத்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய மதங்களுக்கான சுதந்திரம் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றினை எடுத்துநோக்குவோமாயின் மன்னர் ஆட்சியில் பௌத்த மதத்தின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. பின்னர் ஆங்கிலேயர்களின் வருகையோடு கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக ஏனைய மதத்தவர்கள் தத்தம் மதத்தினை பாதுகாத்துக் கொள்வதற்கு மத சீர்திருத்த இயக்கங்களின் வளர்ச்சியானது மதம் செல்வாக்குப் பெற காரணமாயிற்று. ஆனாலும் 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் தோன்றிய பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்களின் வளர்ச்சியானது பௌத்த மதம் செல்வாக்குப் பெற காரணமானது. அதனை அரசு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும். மற்றும் இவை சார்ந்த சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சுதந்திரத்துக்கு பின்னர் நிறைவேற்றப்பட்டு பௌத்த தேசியவாதமாக வளர்ச்சி அடைந்ததனையும் 1956ல் பௌத்த பேரினவாதமாக வளர்ச்சியடைந்ததனையும் காணலாம்.

பிரித்தானியாவிடம் இருந்து டொமினியன் அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு ஐக்கிய தேசியக் கட்சி தோற்றம் பெற்றது. இக்கட்சி தாரள ஜனநாயகப் போக்கினையே கடைப்பிடித்தது ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான S.W.R.D.பண்டாரநாயக்க தலைமைத்துவ முரண்பாடு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று சிங்கள மகாசபையின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தோற்றுவித்தார். இக்கட்சியானது ஆட்சி அமைக்கும் நோக்கோடு பௌத்தத்தினை ஆயுதமாக எடுத்துக் கொண்டு பௌத்த பிக்குகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்து சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் சலுகைகள் வழங்கப்பட்டமையானது பௌத்த தேசியவாதம் தோன்றுவதற்கு வழிசமைத்தது.

மாறாக ஐக்கிய தேசியக் கட்சி மதச்சார்பற்ற கொள்கை காரணமாக பின்னடைவை எதிர்நோக்கியதால் இக்கட்சி மதச்சார்ப்பான கொள்கைகளைக் கடைப்பிடித்தது. குறிப்பாக 1956ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியைத் தோல்வியுறச் செய்ய ஒரு மக்கள் அரசாங்கத்தை பண்டாரநாயக்க ஏற்படுத்துவதற்கு புத்தபிக்குகளின் அரசியல் பிரச்சாரம் ஒரு முக்கிய காரணமானது.

ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் பௌத்த சமய அடிப்படைவாதிகளும், சமய தீவிரவாதிகளும் மற்றும் பிக்குகளும் பௌத்த சமயத்தை திரும்பவும் அரியாசனத்தில் ஏற்ற வேண்டும் என்ற நோக்கோடு மும்முரமாகப் பாடுபட்டனர். 1970களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அவர்களுடைய இந்நோக்கம் கைகூடியது. மேலும், பௌத்தம் அரசமதமாக்கப்பட்டதும், சிங்கள மொழி அரசகரும மொழியாக்கப்பட்டதோடு கிறிஸ்தவ தனியார் பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்டதுடன் சிங்கள கலாசாரத்தினை வளர்ப்பதற்கு தனிப்பட்ட இலாகா உருவாக்கப்பட்டது. 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் இக்கொள்கைகள் உள்வாங்கப்பட்டன. இக்கொள்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவளித்தது.

பௌத்த மகாசங்கத்தைச் சேர்ந்த 'சியாம் நிக்காயா', 'அமரபுர நிக்காயா', 'ராமன்ய நிக்காயா' ஆகிய மூன்று பிரிவுகளும் 'திரி நிக்காயா' என்றழைக்கப்பட்டது. இம் மூன்று நிக்காயாவைச் சேர்ந்த பிக்குகள் பௌத்த விகாரைகளை மையமாகக் கொண்டு கட்சிகளுக்கு ஆதரவாக தமது பிரசாரங்களை மேற்கொண்டன.

மேலும் எல்லா அரசியற் கட்சிகளுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ளதோடு கட்சிகளின் செயற்குழுக்களிலும் சில சபைகளிலும் தலைவராக இயங்கி இருந்தனர். குறிப்பாக சிங்கள பல மண்டலாயத்தின் பிரசார சபையின் தலைவராக சோபித்ததேரோவும், ஜாத்திக்க பெறமுனவின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான சியாம் நிக்காயவின் தலைவரான சத்தானந்த தேரோவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதாரவாக பிரசாரங்கள் செய்ததோடு சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர்.

சிங்கள கிறிஸ்தவ மிசனின் செயற்பாடுகள் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தை பௌத்த மக்கள் மத்தியில் பரப்பியது மட்டுமல்லாமல் பௌத்தர்களின் சனத்தொகை குறைவதற்கு காரணமாய் இருந்தது என்று பௌத்த தேசியவாத இயக்கங்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இத்தகைய பின்னணியில் சிங்கள பிரதேசத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினையும், தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் கிறிஸ்தவர்கள் தமிழ் அரசியற் கட்சிகளையும் ஆதரிக்கத் தொடங்கின.

ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஆரம்ப காலத்தில் ஒரு கிறிஸ்தவராக இருந்ததன் காரணத்தினால் கிறிஸ்தவர்களின் ஆதரவு அவருக்கு கிடைத்தது. இதன் காரணத்தினால் அவர் பௌத்த மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவே செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்களை பௌத்த அடிப்படைவாதிகள் முன்வைத்ததனைத் தொடர்ந்து 1978ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியினால் வரையப்பட்ட அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு அரசமதம் என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு பௌத்த பீடங்களின் பூரண ஆதரவு கிடைக்கப் பெற்றன.

1980களின் பின்னர் பௌத்த மதம் எல்லா அரசாங்க நிறுவனங்களிலும் செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்னர் கட்சிகள் பௌத்த குருமார்களை தம்பக்கம் ஈர்க்கும் தந்திரோபாயங்களை மேற்கொண்டனர். இதன் மூலம் மகாசங்கங்களில் அரசியல் செல்வாக்கு பெற்று வளர்ந்ததனையும் பொதுவாக எல்லா சிங்கள அரசியற் கட்சிகளும் தமது கிளை ஸ்தாபனங்களை பிக்கு சங்கங்களில் அமைத்தனர். மேலும் பிக்குகளின் ஆதரவினைப் பெறுவதற்காக அரசாங்க வாசஸ்தலங்களும், பொன்ஸ்காரர்களும், வெளிநாட்டுப் பயணங்களும், அரசாங்க பதவிகளும், பௌத்த விகாரைகள் கட்டுவதற்கான பணஉதவிகளும் வழங்கப்பட்டன. மேலும் பிரிவெனாக்களும், பிரிவென சர்வகலாசாலைகளும் அரசாங்க கட்சிகளுக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கும் மத்திய நிலையங்களாக மாறின. இதனால் பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதற்கு அவற்றின் மூலம் சிங்கள தேசியவாதத்தினைத் தோற்றுவிக்க முனைந்தனர். இவை காரணமாக இனப்பிரச்சினை முழுமையடைவதற்கும், யுத்தங்கள் தோன்றுவதற்கும் வாய்ப்பை நல்கியது எனலாம்.

பௌத்த பிக்குகளின் ஆதரவை ஒவ்வொரு கட்சிகளும் போட்டியிட்டு பெற முனைந்தன. அரசியற் கட்சிகள் மட்டுமன்றி எல்லாவற்றையும் விட அரசியலில் நேரடியாக ஈடுபடுவதற்கென உருவாக்கப்பட்ட கட்சியே ஜனதா விரமுக்தி பெறமுன ஆகும். 1982ம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் மஞ்சள் காவியுடை அணிந்த ஆயிரம் பிக்குகள் சோசலிச பௌத்த முன்னணியின் கொடியைத் தாங்கி சென்றனர். இதன் மூலம் பௌத்தம் என்ற மதக் காரணி கட்சிகளின் வளர்ச்சியில் முழுமையாக செல்வாக்குச் செலுத்தியிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஜே.வி.பி பௌத்த இயக்கங்களை ஒன்றிணைத்துக் கொண்டதோடு பௌத்தக் கொள்கையான ஜனரஞ்சகக் கொள்கையினை கொண்டிருந்ததோடு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக தீவிர போக்கினைக் கொண்டிருந்தன. ஜே.வி.பியின் கிளர்ச்சியைத் தொடர்ந்து இக்கட்சி தடைசெய்யப்பட்டது. பின்னர் 2000 ஆண்டுகளில் இக்கட்சி மீளவும் இனவாதம் மற்றும் மதவாதத்தை தனது இரண்டு ஆயுதங்களாகக் கொண்டு தென்பகுதியில் மூன்றாவது பிரதான காட்சியாக மாறியது.

பௌத்த தர்மத்தினைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சியாக ஹெல உறுமய விளங்குகின்றது. அது ரலியே ரத்னதேரரு, உருவே தம்மாலோக தேரர் ஆகியோரின் ஆதரவோடு உருவாக்கப்பட்ட கட்சியாகும். இக்கட்சி 1990களில் ஜாதிக ஹெல உறுமய என்று மாற்றம் செய்யப்பட்டது. இக்கட்சியின் பௌத்த துறவியான கங்கொடவில் சோமஹிமி என்பவர் 2002 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தார். மேலும் லங்கா சமசமாஜ கட்சியின் பத்தேகம சமித்த தேரரே இலங்கையின் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த முதல் பௌத்த துறவி எனலாம். (2001ம் ஆண்டில் நிகழ்ந்தது). ஜாதிக ஹெல உறுமய 2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் மொத்தமாக 260 பேரும் பௌத்த துறவிகள் ஆவர். முதற் தடவையிலேயே நாடு முழுவதும் 552,724 வாக்கு அதாவது 6% வாக்குகளைப் பெற்று ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. அது மட்டுமன்றி மதமாற்ற சட்டத்தினைக் கொண்டுவந்து நிறைவேற்றியது.

2004ல் சுனாமிப் பேரனர்த்தத்தைத் தொடர்ந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பொது உடன்படிக்கையை உடைப்பதற்காக ஜாதிக ஹெல உறுமயவின் முக்கிய பிரமுகரான நமல்பே சோபித்த தேரர் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். மேலும் ஜே.வி.பியும், மூன்று பௌத்த பீடங்களும் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவினை சிங்கள பௌத்த சமூகத்திலிருந்து வெளியேற்றி விடுவதாக எச்சரித்ததோடு ஜே.வி.பியுடன், 80 தொழிற்சங்கங்களுடன் பௌத்த அமைப்புக்களும் வீதியில் இறங்கிப் போராடியதால் சந்திரிக்காவின் அரசு சரணடையும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

2005 மஹிந்த ராஜபக்ஷவினை ஆட்சிக்கு கொண்டுவருவதில் ஜாதிக ஹெல உருமய, ஜே.வி.பி மற்றும் பௌத்த அமைப்புக்களின் பங்கு இன்றியமையாதது. இதன் பின்னர் மெல்ல மெல்ல பௌத்த சிங்கள பேரினவாதத்தின் சக்திகள் தலைதூக்க தொடங்கினர். பௌத்த பீடங்களின் ஆதரவுடனும் ஏனைய பௌத்த சங்கங்களின் ஆசிகளுடனும் யுத்தத்தினை வெற்றி பெறுவதற்கு வழிசமைத்தது எனலாம். அதன் பின்னர் பௌத்த மக்களினால் போற்றப்படும் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ கருதப்படும் அளவுக்கு கட்சிகளின் வளர்ச்சியில் மதம் எவ்வளவு தூரம் பங்களித்துள்ளது என்பதனை அறியமுடிகின்றது.

சிறுபான்மை இனத்தவர்களின் மதமான இந்துமதம், கிறிஸ்தவமதம் என்பவற்றின் செல்வாக்கு தமிழரசுக் கட்சியிலும் மற்றும் ஏனைய தமிழ் கட்சிகளிலும் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமான

தாக்கத்தினை காணக்கூடியதாக உள்ளது. தேர்தல் காலங்களில் இந்து மற்றும் கிறிஸ்தவ மிசனின் ஆதரவினை பெற்றுக்கொள்ளும் தன்மையும், பிரசாரத்துக்காக தேவாலங்கள் கோவில்களை பாவித்தல் போன்ற செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகின்றது.

அதேபோல முஸ்லிம் சமூகத்தில் இஸ்லாம் மதத்தின் செல்வாக்கினை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசியவாத முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளில் காணப்படுவதனை அறியமுடியும். குறிப்பாக இஸ்லாமியரின் மத வழிபாடுகளை சுதந்திரமாக கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதில் இக்கட்சிகளின் கொள்கைகள் பெரிதும் முனைப்புக் காட்டுகின்றன.

பொதுவாக நோக்குகின்ற போது அரசியலில் அதிகளவு தாக்கத்தினை செலுத்துவதாக பௌத்தம் விளங்குகின்றது. ஆட்சி தலைவர்களைத் தெரிவு செய்வதில் இருந்து கொள்கை உருவாக்கம், சமாதான செயன்முறை, இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு, மதக்கொள்கை, பொருளாதாரம், கலாசாரம் போன்ற எல்லாவற்றிலும் பௌத்த மதத்தின் தாக்கத்தினைக் காணமுடிகின்றது. அதேநேரம் ஆட்சி விடயங்களில் ஆட்சியாளர்கள் பௌத்த மகா நாயக்கர்களை சந்தித்து ஆலோசனை பெறுதல், ஆசிபெறுதல், தேர்தல் பிரசாரங்களில் பௌத்த துறவிகள் பங்குபற்றுதல், விகாரைகளை அரசியற் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துதல் என அனைத்து விடயங்களிலும் பௌத்தம் தாக்கம் செலுத்துவதனைக் காணமுடிகின்றதோடு அரசாங்கத்தை அமைப்பதில் கட்சிகளின் செயற்பாடு மற்றும் அதன் வெற்றி தோல்வி போன்ற கட்சிகளின் செயற்பாட்டிலும் அதன் தாக்கத்தினைக் காணமுடிகின்றது. சுருங்கக் கூறுவதாயின் அரசியற் கட்சிகள் பௌத்த மயப்படுத்தப்பட்ட தன்மையினைக் காணமுடிவதுடன் அரசியலில் பௌத்தம், கட்சிகளில் பௌத்தம் என பௌத்த மயப்படுத்தப்பட்டதாக அரசாங்கம் விளங்குவதனை காணமுடிகின்றது.

**முடிவுரையும் பரிந்துரையும்**

எனவே இலங்கை பல்லின கலாசாரத்தினைக் கொண்ட நாடு ஆகும். இங்கு பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் எனப் பல மதத்தவர்கள் வாழ்கின்றனர். ஆனால் யாப்புக்களின் மூலம் பௌத்தம் அரச மதமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கையில் அரச மதமாகவும், மதசார்பான அரசாகவும் விளங்குகின்றது. இலங்கையில் அரசியலில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள ஆட்சியாளர்களே ஆட்சிக்கு வருகின்றனர். இதனால் சிறுபான்மை இனத்தவர்கள் ஒடுக்கப்படுகின்றனர். இங்கு பெரும்பான்மை இனத்தைக் கொண்ட பௌத்த மதம் முக்கியப்படுத்தப்படும் போது இலங்கையில் ஏனைய சிறுபான்மை மதங்கள் புறக்கணிக்கப்படும் தன்மை காணப்படுகின்றது. இத்தகைய தன்மையானது இனவாதப் பண்புகள் மேலோங்குவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னர் மத சுதந்திரம் என்பது கேள்விக்குரிய ஒன்றாக மாறியது. பௌத்த துறவிகளை மையமாகக் கொண்டு இயங்கும் பொதுபலசேன, இராவணபலய, ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் மதசுதந்திரத்திற்குத் தடையாக அமைந்தன. இது மதங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கியது. குறிப்பாக அருத்தகம, பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, ஹலால் முத்திரைக்கு எதிரான செயற்பாடுகள், இந்து மதக் கோயில்களான தம்புள்ள பத்திரகாளி அம்மன் கோயில், கொழும்பு பூமாயி அம்மன் கோயில் போன்ற கோயில்களில் சிலைகள் உடைப்பு மற்றும் கொள்ளைகள், அதேபோன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டமை போன்ற துயர சம்பவங்கள் மதவாதத்தின் எல்லையற்ற செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன.

ஜனநாயகத் தன்மையுடைய நாடுகளில் மதம் சுதந்திரமானதாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரின் சுயவிருப்புக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். நாடுகளில் அரசுகள் மதச்சார்பற்ற தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. இந்த மதச்சார்பற்ற தன்மை என்பது எந்தவொரு மதத்தையும் சாராது நடுநிலைத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இன்று நடைமுறையில் மதச்சார்ப்பற்ற தன்மை கேள்விக்குரியதொன்றாகவே மாறியுள்ளது. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் எவ்வாறு மதத்திற்கும் உரிமைகள் அளிக்கப்படுவதாக யாப்புரீதியாக கூறப்பட்டாலும் கூட ஆட்சியில் பெரும்பான்மை இனத்துடன் தொடர்புபட்ட மதத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இலங்கையில் மதச்சார்பான கொள்கையினால் அரசியலில் இனவாதப் பண்புகள் மேலோங்குகின்றன. இது 1920களில் இருந்தே அடையாளங் காணக்கூடியவகையில் தோற்றமளித்தாலும் 1931 டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் பின்பாக அச்சக்திகள் படிப்படியாக வலுவடைந்து 1956ல் உச்சக் கட்டத்தினை அடைந்ததனைக் காணலாம். இதன் தாக்கமான போட்டிக் கட்சிகள் அதிகாரத்தினை கைப்பற்றிக் கொள்ள முனைகின்ற கட்சிகள் மதவாதத்தினை சாதகமாக்கி அரசியல் பயனைப் பெற முற்படுவதனால் அது மதவாதக் கட்சிகளின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் வழிசமைத்துள்ளன. இதனை இலங்கை வரலாற்றின் மூலம் அறிந்துகொள்வதோடு அளவீடு செய்யவும் முடிகின்றது.

இவ்வாறான மதவாத வளர்ச்சி காரணமாக மதக் கலவரங்கள் மற்றும் மதம் சார்ந்த யுத்தங்கள், வன்முறைகள் தோன்றுவதற்கு வழிசமைக்கும். ஆகவே பல்லின சமூகத்தைக் கொண்ட நாடுகளில் மதமும், அரசம் பிரிதல் அவசியம். மதத்தின் அரசின் சலுகைகள், தலையீடுகள் போன்றன நிராகரிக்கப்பட வேண்டும். புதிய யாப்பு வரையப்பட வேண்டும். இன்றைய சூழலில் மதசார்பற்ற அரசாக பிரகடணப்படுத்தப்பட வேண்டும். மேலும் மதங்களுக்கு வழங்கப்படும் எல்லையற்ற சலுகைகள் குறைக்கப்பட வேண்டும். மேலும் மதவாதத்தினை தூண்டுகின்ற கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும். மதவாதத்தினை தூண்டுகின்ற குழுக்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை தடைசெய்வதன் மூலமே மதசார்பற்ற ஒரு நாட்டினை கட்டியெழுப்ப முடிவதுடன் கட்சிகளின் கொள்கைகள் மற்றும் சித்தாந்தங்களில் ஜனநாயக மயமான கருத்தியல்கள் வளர்ச்சி பெற வழிசமைக்கும் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்.**


1. நந்தகுமார்.வை (2008) **ஆய்வு முறையியல் முறைகளும், நுட்பங்களும்,** கொழும்பு; யுனிஆர்ஸ்ட் லிமிடெட்
2. கீதபொன்கலன்.ச (1987) **பௌத்த சிங்களவரும், சிறுபான்மையினரும்,** சென்னை; செரோ வெளியீடு.
3. குணவர்த்தன.எச் (1985) **சிங்களத்தின் வழிவந்தோர் - வரலாற்றிலும் சிங்கள உணர்வு - இனத்துவமும், சமூகமாற்றமும்**, யாழ்ப்பாணம்; சமூக விஞ்ஞானக் கழகம்.
4. குமாரி ஜயவர்த்தனா (1979) **இலங்கை இனத்துவமும் சமூக மாற்றமும்,** யாழ்ப்பாணம்; புனிதவளை கத்தோலிக்க அச்சகம்.
5. ……………… (1995) **இலங்கையின் இனவர்க்க முரண்பாடு,** கொழும்பு; குமரன் புத்தக இல்லம்.
6. பணிக்கர்,கே.என் (1998) **வகுப்புவாத அச்சுறுத்தலும், மதச்சார்பின்மை சவால்களும்,** சென்னை: சவுத்விஷன்
7. பேட்ராம் பஸ்தியாம்பிள்ளை (1992) **தென்னாசியாவில் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை,** மார்க்கம், சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வு.
8. மஹிந்த தீகல்லே (2005) **இலங்கையின் இனமுரண்பாடும், பௌத்தமும், சமாதானமும்** ஒஸ்லோ வெளியீடு
9. முகம்மது சலீம்,அ (1998) **ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்,** கொழும்பு: நிசானா பப்ளிஷர்ஸ்
10. திருநாவுக்கரசு.மு (1991) **"இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்"**, யாழ்ப்பாணம்; தமிழ்த்தாய் பதிப்பகம்.
11. சத்தியசீலன்.ச (1994) **இலங்கை அரசியலில் மதமும் மொழியும்,** யாழ்ப்பாணம்; அருண் வெளியீட்டகம்.
12. சாமிநாதசர்மா.வெ (1949) **அரசியற் கட்சிகள்,** சென்னை: பிரபஞ்சஜோதி பிரசுராலயம், சென்னை.
13. ஜயதேவ உயான்கொட (2009) **நாடும் நமது போக்கும் - இலங்கை அரசியல் 2007-2008**, கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்
14. ஜோர்ஜ்ப்ரெக்ஸ், பார்ட்லொம் (2004) **பல்வகைமையைக் கையாளுதல், இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்கள்,** நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிறுவனம்.
15. Urmila Phadnis (1976) ***Religion and Political Culture in Srilanka,*** New Delhi, Monobar.
16. Desilva C.R, Wesumperuma.D (1998) ***Political Culture in Srilanka***, Colombo
17. Desilva.C.R (1989) ***Political Party System in Sri Lanka***
18. Jayadeva Uyangoda, ***Religion in Context, Buddhism and Sicio-Political Change in Sri Lanka.***
19. Thambiah S.J (1992) ***Buddhism Betrayed? Religion, Politics and Violence in Sri Lanka,*** Chicago: The University of Chicago Press.
20. Thiruchelvam.D, Dattathreta.E.S (1998) ***Culture and Politics of identity in Srilanka,*** Colombo; International Centre on studies
21. Seneviratna H.L (2002) ***"Buddhism, Identity and Conflict"***, Colombo; International Centre for Ethnic Studies
22. Wishwawarnapala (2005) ***Sri Lanka Freedom Party***, Colombo, Chatura Printers